**அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டம் - 2015**

அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் (டிஎஸ்டபிள்யூஆர்பிபி) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜிஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2006 மார்ச் 16 ஆந் திகதிய கியூ 5200 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை, 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய ரீஎவ் 056901 ஆம் இலக்க மானிய உடன்படிக்கை மற்றும் 2008 மே 28 ஆந் திகதிய சீஈ4406 ஆம் இலக்க நிதி அளித்தல் உடன்படிக்கை என்பவற்றின் 4:09 (ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் முன்னைய நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சாகிய தற்போதைய மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை மஹாவலி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வளங்கள் சபை மற்றும் மாகாண சபைகள் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகும். பெரிய அணைக்கட்டுக்களைச் செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக நீண்டகால நிலைத்து நிற்கவல்ல ஒழுங்கமைப்பை தோற்றுவிப்பதும் நீர்வளத் திட்டமிடல்களை மேம்படுத்துவதுமே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயமானது ரூபா 8,217.29 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 72.21 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,494.07 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 65.88 மில்லியனை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு செய்யப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2008 யூன் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலப்படுத்தப்பட்டது. எனினும் 2011 யூலை 07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்ட காலப்பகுதியானது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் சம்மதத்துடன் 2015 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பித்திருந்தது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடன் மற்றும் மானியங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடன் மற்றும் மானியங்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழுங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட காலம் 2015 யூன் 30 இல் பூர்த்தியாகியிருந்த போதிலும் செயற்திட்டத்தினால் ரூபா 1,139.69 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு 07 அமுலாக்கல் முகவர்களிடம் காணப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் செயற்திட்டத்தின் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தின் 01 ஆம் மற்றும் 02 ஆம் கூறுகளின் கீழ் செயற்திட்ட காலப்பகுதியின் போது ரூபா 399.70 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட வலிமண்டலவியல் உபகரணங்கள், பாரந்தூக்கிகள் மற்றும் புல்டோசர்கள் என்பவற்றின் கிரயம் செயற்பாட்டுக் கிரயமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2015 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய/கடன் உடன்படிக்கைளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் - 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 65.88 | 7,494.07 | 835.00 | 6.07 | 805.15 | 62.20 | 7,957.58 |
| ஜிஓஎஸ்எல் | 6.33 | 723.22 | 120.00 | 0.28 | 36.70 | 7.95 | 1,018.22 |
| | 72.21 | 8,217.29 | 955.00 | 6.35 | 841.85 | 70.15 | 8,975.80 |

3.2 பௌதீகச் செயலாற்றல்

(அ) கூறு 01 – அணைப் பாதுகாப்பும் செயற்பாட்டு வினைத்திறன் மேம்பாடும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்ட காலம் 2015 யூன் வரை 02 ஆண்டுகளால் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 32 அணைக்கட்டுக்களில் 27 அணைக்கட்டுக்களின் திருத்த வேலைகள் 02 மாதங்களிலிருந்து 29 மாதங்கள் வரையான வீச்சுடைய கால தாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. வேலைகளைப் பூர்த்தி செய்வதிலுள்ள தாமதத்தின் காரணமாக 11 அணைக்கட்டுக்களின் திருத்தவேலைகள் மீது ரூபா 333.05 மில்லியன் கூட்டு மொத்தமான கிரய அதிகரிப்பு இடம்பெற நேரிட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஏனைய 12 அணைக்கட்டுக்களின் திருத்த வேலைகள் மீது ரூபா 228.41 மில்லியன் கூட்டு மொத்தமான கிரயங்களின் சேமிப்புக்களும் அறிவிக்கப்பட்டிருந்தன.

(ii) 2011 ஆம் ஆண்டில் ரூபா 475.7 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஆரம்பிக்கப்பட்ட திஸ்ஸவெவ, நாச்சடுவவெவ மற்றும் நுவரவெவ குளங்களின் அணைக்கட்டுக்களின் திருத்த வேலைகள் ஒப்பந்தக்காரர்களின் மந்தமான செயலாற்றல்களின் காரணமாக 2015 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இடைநிறுத்தப்பட்ட வேளையில் அவற்றின் மீது ரூபா 278.19 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய திருத்த வேலைகள் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், 02 ஒப்பந்தங்களின் செயலாற்றல் முறிகள் மாத்திரம் செயற்திட்டத்தினால் பணமாக மாற்றப்பட்டிருந்தன.

(iii) நிதி உடன்படிக்கையின் 01(ஓ) பிரிவின் 01 ஆம் பட்டோலையின் பிரகாரம் சேனநாயக்க சமுத்திரம், சமனலவெவ, விக்டோரியா ஆகிய குளங்களின் அணைக்கட்டுக்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சிபார்சுகளை விரிவான புலனாய்வுகளினூடாகப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 52.47 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் செயற்திட்ட காலத்தின் இறுதிவரையிலும் அந்த ஆய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) ரந்தெனிகல, ரன்டம்பே, ராஜாங்கனை, டபிளு ஓயா மற்றும் கந்தலம ஆகிய குளங்களின் வான்கதவுகளுக்கு வர்ணம் பூசுதலும் அவைகளைப் பிரதியீடு செய்தலும், தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் காட்சிப்படுத்தல் முறைமை என்பவற்றை பொருத்துதல், நிலநடுக்க கண்காணிப்பும் முன் எச்சரிக்கை முறைமையும், விக்டோரியா அணை மற்றும் பொல்கொல்ல சுரங்கத்தின் திருத்த வேலைகள், மதகு பீப்பாய் பரிசோதனை உபகரணங்களின் கொள்வனவு மற்றும் 03 நீர் பயன்படுத்தல் திட்டங்களை அமுல்படுத்துதல் மீதான முன் சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ளுதல், ஆகிய வேலைகளை உள்ளடக்கிய ரூபா 2,179 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேற்கொள்ளப்பட

வேண்டிய 09 நடவடிக்கைகள் செயற்திட்ட காலத்தின் இறுதிவரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்கூறப்பட்ட வேலைகளானவை அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர்வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் மேலதிக நிதியளிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகளின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

(v) இலங்கை மின்சார சபையினால் முகாமை செய்யப்பட்டுவந்த காஸல்ரி நீர்தேக்கத்தின் அணைக்கட்டுக்களின் சிவில் வேலைகள் மற்றும் மின்சார வேலைகள் மீதான 02 ஒப்பந்தங்களை செயற்திட்டம் 06 மாதங்களுக்குள் ஒரு பொதுக்கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 99.08 மில்லியன் பெறுமதியில் வழங்கியிருந்தது. இதனை 2013 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அணைக்கட்டின் அடிப்பகுதியிலுள்ள நீரை வெளியேற்றும் வழியின் கதவுகளைப் பொருத்துவதனைத் தவிர்த்து அவ்வொப்பந்தங்கள் 2015 திசெம்பர் 31 இலேயே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. எஞ்சிய வேலைகளுக்காக செயற்திட்டத்தின் மேலதிக நிதியளித்தல் ஒழுங்குகளின் கீழ் புதிய ஒப்பந்தங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

(vi) நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரிவு 01(எ) இன் பட்டோலை 01 இன் பிரகாரம் 15 அணைக்கட்டுக்களுக்காக ‘‘செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு கையேட்டினதும் செயற்பாட்டு நடைமுறைகளின் அபிவிருத்தி’’ மற்றும் அவசர செயல்நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு வேண்டப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறான திட்டங்கள் 2015 யூன் 30 இல் உள்ளவாறு 08 அணைக்கட்டுக்களுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(vii) நிதியளித்தல் உடன்படிக்கையின் 01(ஒ) பிரிவின் பிரகாரம் அணைக்கட்டு பாதுகாப்பு நோக்கங்களுக்காக 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். எனினும், செயற்திட்ட காலப்பகுதியின் போது அவற்றின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) 2016 மார்ச் 31 இற்கு முன்னர் செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட அணைக்கட்டுக்களின் அணை அளவுரு, செய்த வேலைகளின் தன்மை மற்றும் திருத்த வேலைகள் தொடர்பாக இனங்காணப்பட்ட பிரதான அம்சங்கள் என்பவை மீதான பொழிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூறு 2 – நீர் வளிமண்டலவியல் தகவல் முறைமையினை நவீனப்படுத்தலும் தரமுயர்த்துதலும்

நீர் வளிமண்டலவியல் தகவல் முறைமைக்கான தகவல்களை சேகரிப்பதற்கு 122 நிலையங்களைத் தாபிப்பதற்காக ரூபா 628.94 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 70 நிலையங்கள் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 30 இல் உள்ளவாறு அவற்றின் மீது ரூபா 813.57 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தின் மேலதிக நிதி ஒழுங்குகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் ஏனைய நிலையங்களைத் தாபிப்பதற்கு பிரேரிக்கப்பட்டிருந்தது.

(இ) கூறு 3 – பல்துறை நீர் வளங்கள் திட்டமிடல்

பல்துறை நீர் வளங்கள் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய நீர் பயன்பாட்டுத் திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட மஹாவலி நீர் வளங்கள் திட்டம் மற்றும் முந்தனி ஆறு ஆற்றுப்படுக்கைத் திட்டம் என்பவற்றை அமுல்படுத்துவதற்காக ரூபா 742.75 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 516.84 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 478.69 மில்லியன் தொகையானது அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டினை ரூபா 49.21 மில்லியனால் மிகைத்து திட்டமிடல் நோக்கங்களுக்கான ஆலோசனை சேவைகளுக்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கான அமைச்சரவையின் அங்கீகாரமானது 2016 யூன் 30 இலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிப்படுத்தல் கடிதத்தின் மூலம் வேண்டப்பட்டவாறு விநியோகத்தர் மோட்டார் கிரேடர்களை வழங்கும் அனுபவத்தைக் கொண்டிருக்காத போதிலும் 2014 ஆம் ஆண்டில் அவ்வாறான 05 மோட்டார் கிரேடர்களைக் கொள்வனவு செய்வதற்கு கோரப்பட்ட விலைமனுக்கள் தொடர்பாகச் செயற்திட்டத்தினால் இரண்டாவது ஆகக்குறைந்த விலைமனு தெரிவுசெய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் உபகரணங்கள் பல தொழில்நுட்ப மாதிரிகளுடன் இணங்கியிருக்காதமை அவதானிக்கப்பட்டது. ஆகக் குறைந்த விலைமனுதாரர் கோரிய விலையை விட அதிகமாக ரூபா 5.87 மில்லியன் தொகை தெரிவுசெய்யப்பட்ட விநியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நாலந்த குளத்தின் அணைக்கட்டுக்களை புனரமைத்தல் வேலைக்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 267.90 மில்லியனாக இருந்த போதிலும் இவ்வேலைக்கான ஒப்பந்தம் ரூபா 392.99 மில்லியன் கிரயத்தில் 2013 மே மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. 24 மாதங்களிற்கு ஒப்பந்தகாரர்களுக்கான வசதிகளை வழங்குவதற்கு ஒப்பந்தகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுவில் ரூபா 60 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்நோக்கத்திற்காக கணியப்பட்டியலில் ரூபா 2.40 மில்லியன் தொகை மாத்திரம் ஒதுக்கீடு

செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின் கிரயமானது பின்னர் 49 முரண் கட்டளைகளினூடாக ரூபா 392.94 மில்லியனிலிருந்து ரூபா 611.30 மில்லியன் வரை 55 சதவீதத்தால் அதிகரித்திருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், வேலைகளின் மொத்த கிரயத்தில் ரூபா 407.05 மில்லியன் தொகை மாத்திரம் இச் செயற்திட்டத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 204.25 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் மேலதிக நிதியளித்தல் ஒழுங்குகளின் கீழ் சாட்டுதல் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

## 3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 15 அணைக்கட்டுக்களின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 30 இல் இறுதிக் கொடுப்பனவுகளும் தீர்த்துவைக்கப்பட்டிருந்தன. எனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவ்வேலைகளின் இறுதிக் கொடுப்பனவுகளும் நிறுத்திவைத்தல் பணமும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியளித்தல் உடன்படிக்கையின் 01(என்) பந்தியின் பிரகாரம் பொல்கொல்லை மற்றும் புதிய லக்சபானா குளங்களின் சுரங்கங்களின் திருத்த வேலைகளுக்கான தேவைப்பாடுகளை அறிந்து கொள்வதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் நடைமுறைகளின் பிரகாரம், சுரங்கங்கள் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் 20-30 ஆண்டுகளுக்குள் அவ்வாறான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எனினும் பொல்கொல்லை சுரங்கம் மீதான வேண்டப்பட்ட ஆய்வானது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 28 ஆண்டுகள் கடந்த பின்னரும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விளக்கமளித்தல்களின் பிரகாரம், ஆய்வு நோக்கங்களுக்காக அணைக்கட்டுக்களை மூடுவது தொடர்பாக பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களின் காரணமாக இந்நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு வரிசை அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. எனினும் ஆராய்ச்சிகளுக்காக முறையான திட்டம் காணப்படாததுடன் சுரங்கங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியத்தையும் கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்ததென அவதானிக்கப்பட்டது.